09.04.2026

**<u>MCOP. 4/2025 இ.ம.எண்.02/2026 மனு உத்தரவின் பேரில் ம.சா.1 மீண்டும் அழைத்து முதல் விசாரணை தொடர்ச்சி:–</u>**

நான் அசல் மனுவில் 1ம் மனுதாரர் ஆவேன். நான் ஏற்கனவே எனது முதன்மை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்து சாட்சியம் அளித்துள்ளேன். நான் தற்பொழுது கூடுதல் நிரூபண வாக்குமூலம் ஆவணங்களுடன் தாக்கல் செய்துள்ளேன். விபத்தில் இறந்து போன எனது மகன் அப்துல் ரஹ்மான் என்பவரின் பாஸ்போர்ட் அசல் **ம.சா.ஆ.12** ஆகும். விபத்தில் இறந்து போன எனது மகன் அப்துல் ரஹ்மான் என்பவரின் ஓட்டுநர் உரிமம் அசல் **ம.சா.ஆ.13** ஆகும். 12.07.2022–ல் ஓமன் நாட்டிலிருந்து எனது மகன் எனக்கு பணம் அனுப்பியதற்கான ரசீது அசல் **ம.சா.ஆ.14** ஆகும். ( 2ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனைக்குட்பட்டு குறியீடு செய்யப்பட்டது). மனுப்படி தீர்ப்பாக பிரார்த்திக்கிறேன்.

**<u>1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

எனது பிரமான வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள பெட்டியானது நான் இதற்கு முன் சாட்சியம் அளிக்கும் போதும் எங்கள் வீட்டில் தான் இருந்தது என்றால் சரிதான். எனது மகன் ஓமன் நாட்டிலிருந்து பணம் அனுப்பியதற்கான ம.சா.ஆ.14 ஆவணம் வழக்கிற்காக அதிக இழப்பீடு பெற வேண்டும் என்று உற்பத்தி செய்து தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. ம.சா.ஆ.14 ஆவணத்தை வைத்து எனது மகனின் மாத வருமானத்தை நிர்ணயிக்க முடியாது

என்றால் சரியல்ல. ம.சா.ஆ.12 முதல் ம.சா.ஆ.14 ஆவணங்களை நான் இழப்பீடு அதிகமாக பெற வேண்டும் என்ற காரணத்திற்காக உற்பத்தி செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :– இல்லை.**

Typed down to my dictaion, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.